# 9 மூன்று சொல்லோவியங்கள்

நளமகாராசனுடைய வரலாற்றை சித்திரித்துக் கூறுவது நளவெண்பா. இதனை ஆக்கித் தந்தவர் பெரும்புலவர் புகழேந்தியார். இந்நூல், நளனுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சித்திரித்துக் காட்டுவதோடு ஆங்காங்கே அறக் கருத்துக்களையும் புகழேந்தியாரின் கற்பனையிலே தோன்றிய சொல்லோவியங்களையும் உள்ளடக்கி மிளிர்கின்றது. நளவெண்பாவிலுள்ள சொல்லோவியங்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கூறுவது இயலாததொன்று. எனினும் மூன்று சொல்லோவியங்களை எடுத்து நோக்கி, அவற்றிற் பொதிந்து மிளிரும் விழுமிய உணர்ச்சியையும் கற்பனை வளத்தையும் கவிச்சிறப்பையும் காண்போம்.

முன்பின் அறியாத இருவர் ஒருவரை ஒருவர் காண்கிறார்கள். அவர்களின் கண்கள் இணைகின்றன. உள்ளங்களும் பிணைகின்றன. இவ்வாறு கண்கள் இணைந்து, உள்ளங்கள் பிணைவது கவிஞர்களின் கற்பனைக்கு நல்ல விருந்தாக அமைந்து விடுவதுண்டு. மிதிலையிலே இராமனும் சீதையும் ஒருவரை ஒருவர் நோக்கி நின்ற நிலையை 'அண்ணனும் நோக்கினான், அவளும் நோக்கினாள்' என்று கம்பன கம்பராமாயத்திலே சித்திரித்துக் காட்டுகின்றான். விதர்ப்ப நாட்டிலே நளனும் தமயந்தியும் ஒருவரை ஒருவர் நோக்கி நின்றநிலையைப் புகழேந்தியார் நளவெண்பாவிலே சொல்லோவியமாகத் தருகிறார்.



நளனும் தமயந்தியும் முன்பின் ஒருவரை ஒருவர் அறியாத இருவர். அவர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்க நேர்ந்த போது ஒருவரை ஒருவர் பார்த்தனர்; அவர்கள் இருவரின் கண்களும் சந்தித்தன; அவர்களின் பார்வை, மனத்திலே வேறுபாடற்ற பொதுப் பார்வை அல்லவா? எனினும் நேர் நேராகப் பார்த்தபோது பருவத்தால் ஒத்த இருவரிடத்திலும் காதல் உணர்வு உண்டாயிற்று. இருவர் உள்ளங்களும் இணைந்து விடுகின்றன. இந்தக் காட்சியையே புகழேந்தியார் கற்பனையிலே கண்டு சொல்லோவியமாக நளவெண்பாவிலே தருகிறார்.

*நளனும் தமயந்தியும் ஒருவரை ஒருவர் பார்த்தனர். கண்கள் சந்தித்தன. கவிஞனுக்கு நளனின் கண்கள் செந்தாமரை மலர்கள் போலத் தெரிந்தன. நளனுடைய கண்களின் மலர்ச்சியும், செம்மை நிறமும் கவிஞனுக்குச் செந்தாமரை மலர்களை நினைவுக்கு கொண்டு வந்தன போலும்!*

*தமயந்தியின் கண்களைக் கண்டபோது கருங்குவளை மலர்கள் கவிஞன் நினைவுக்கு வந்தன. தமயந்தியின் கண்களின் கருநிறமும் மலர்ச்சியும் கருங்குவளை மலர்களைக் கவிஞனின் நினைவுக்கு கொண்டு வந்ததில் வியப்பில்லையே! செந்தாமரை மலர்கள் ஒரு புறம். கருங்குவளை மலர்கள் மறுபுறம். நளனுடைய செந்தாமரை போன்ற கண்களும் தமயந்தியின் கருங்குவளை போன்ற கண்களும் சந்தித்தன. இந்த சந்திப்பு கவிஞனின் கற்பனைக்கு நல்விருந்தாயிற்று. கண்களின் சந்திப்புக் குவளை மலரில் செந்தாமரை மலரும், செந்தாமரை மலரிலே கருங்குவளைப் பூவும் பூத்தாற்போற் கவிஞன் கற்பனைக்கு தோன்றிற்று.*

**தேங்குவளை தன்னிலே செந்தா மரைமலரப்**
**பூங்குவளை தாமரைக்கே பூத்ததே - ஆங்கு**
**மதுநோக்கும் தாரானும் வாள்நுதலும் தம்மில்**
**பொதுநோக் கெதிர் நோக்கும் போது.**

*என்று நளனும் தமயந்தியும் ஒருவரை ஒருவர் நோக்கிய நோக்கைச் சொல்லோவியமாகத் தருகிறார் புகழேந்தியார்.*

*நளன், தமயந்தி ஆகிய இருவரின் கண்களை முறையே தாமரை மலராகவும், கருங்குவளைப் பூவாகவும் புலவர் உருவகஞ் செய்துள்ளார். குவளை மலர்போன்ற தமயந்தியின் கண்களைச் செந்தாமரை மலர்போன்ற நளனுடைய கண்கள் பார்த்தன. குவளை மலர் போன்ற தமயந்தியின் கண்கள், நளனுடைய செந்தாமரை போன்ற கண்களை நோக்கின. இவ்வாறு நளன் முதலிலே தமயந்தியைப் பார்த்ததையும், பின்னர் தமயந்தி நளனைப் பார்த்ததையும் முறைப்படுத்தி,*

**தேங்குவளை தன்னிலே செந்தா மரைமலரப்**
**பூங்குவளை தாமரைக்கே பூத்ததே** *என்று நயம்படக் கூறினார் புகழேந்தியார்.*

*காதலரின் இப்பார்வையை,*

**கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச் சொற்கள்**
**என்ன பயனுமில**

*என்றான் வள்ளுவன். கம்பன் இப்பார்வையையும் இப்பார்வையால் நிகழ்ந்த உள்ளப் பிணைப்பையும்,*

**பருகிய நோக்கெனும் பாசத் தாற்பிணித்..**
**இருவரும் மாறிப்புக் கிதய மெய்தினார்**

என்று வருணிக்கின்றான்.

சுயம்வரத்திலே தமயந்தி நளனுக்கு மாலை சூட்டினாள். அவனைத் தன் மணாளனாகக்கொண்டு மகிழ்ந்தாள். நளன் தமயந்தியுடன் நிடத நாட்டுக்குச் சென்று நாட்டைச் செல்வச் சிறப்போடு ஆட்சி செய்தான். ஆண்டுகள் சில கழிந்தன. 'நளனைக் கீழ்மைப் படுத்துகிறேன், தமயந்தியையும் அவனை விட்டுப் பிரிக்கிறேன்' என்று சூளுரைத்துக் காலம் பார்த்திருந்த கலி, புட்கரன் என்னும் மன்னனை நளனுடன் சூதாட ஏவினான். நளன் அவனுடன் சூதாடினான். நாடு நகர் முதலிய அரச செல்வங்கள் யாவற்றையும் பணயமாக வைத்துத் தோற்றான். நாட்டைவிட்டு மனைவியோடு காட்டுக்குப் புறப்பட்டான். நளன் முடிதுறந்து நாட்டைவிட்டு நீங்கியதையும், புட்கரன் சூதாட்டத்தில் வென்று முடிசூடி நிடத நாட்டில் ஆட்சிக்கு வந்ததையும் அழகான உவமைகொண்டு வருணித்துச் சொல்லோவியமாக நளவெண்பாவிலே தருகிறார் புகழேந்தியார்.

**மென்கால் சிறையன்னம் வீற்றிருந்த மென்மலரைப்**
**புன்காகம் கொள்ளத்தான் போனாற்போல் - தன்கால்**
**பொடியாடத் தேவியொடும் போயினான் அன்றே**
**கொடியானுக் கப்பார் கொடுத்து**

நிடத நாடு நீர்வளமும் நிலவளமும் உடையது. சாகரஞ்சூழ் நன்னாட்டின் முன்னாட்டும் நாடு பல நாடுகளுக்கு முதன்மையாகத் திகழ்ந்தது. தாமரை மலர் மலர்களுள்ளே சிறந்தது. பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை என்று தேவாரம் பாராட்டிப் பேசுகின்றது. தாமரை மலர் வளப்பமும் வண்மையும் நிறைந்தது. ஆகவே நாடுகளுக்குள்ளே முதன்மையான நிடத நாட்டை மலர்களுக்குள்ளே சிறந்த தாமரை மலருக்கு ஒப்பிட்டுரைக்கின்றான் கவிஞன்.

அந்த வளமுடைய நிடத நாட்டை ஆட்சி செய்தவன் நளன். அவன் மன்னர்களுக்குள்ளே அழகாலும் ஆட்சித் திறத்தாலும் சிறந்து விளங்கினான். அன்னப் பறவை, பறவைகளுக்குள் சிறந்தது. அழகாலும் அறிவாலும் உயர்ந்தது. ஆகவே மன்னர்களுக்குள் தலைசிறந்த நளன், பறவைகளுக்குள்ளே தலைசிறந்த அன்னப் பறவையைப் போன்று விளங்கினான். நிடத நாட்டிலிருந்து ஆட்சிசெய்த நளன், தாமரைப் பூவில் வீற்றிருக்கும் அன்னப் பறவையைப் போலக் கவிஞன் கண்களுக்குத் தோன்றினான். எனவே கவிஞன் வளமுள்ள நிடத நாட்டைச் செழிப்புள்ள தாமரைப் பூவுக்கும், அழகுள்ள நளனை கவின் நிறைந்த அன்னப் பறவைக்கும் ஒப்பிட்டுரைத்தான்.

நிடத நாட்டை ஆண்ட நளன் கலியின் வஞ்சனைக்கு ஆளானான்; நாட்டை

இழந்தான்; காட்டை நோக்கிப் புறப்பட்டான்; நிடத நாட்டு ஆட்சியைத் தாங்கினான் புட்கரன். இந்நிகழ்ச்சி கவிஞனின் கற்பனையைச் சிறகடித்துப் பறக்க வைத்தது. நளன் நிடத நாட்டைவிட்டு நீங்கிய துன்ப நிகழ்ச்சி, தாமரை மலரில் வீற்றிருந்த அன்னம் அந்த மலரை விட்டுப் பிரிந்தது போலத் தோன்றிற்று. அன்னம் மென்மையான கால்களையும் சிறகுகளையும் உடையது. அந்த மென்மையான கால்கள் நொய்மையான இதழ்களையுடைய தாமரை மலரை அணி செய்ததேயன்றி, வறுமைப் படுத்தியதன்று. அதே போன்று நிடத நாட்டைவிட்டு நளன் நீங்கியமை அன்னப் பறவை தாமரைப் பூவை விட்டு நீங்கியது போலக் கவிஞன் கண்களுக்குத் தெரிந்தது. நளன் நாட்டைவிட்டு நீங்கியதும் புட்கரன் ஆட்சிக்கு வந்தான். புட்கரன் கொடுமையானவன். சூதாடி ஆட்சியைக் கைப்பற்றியவன். தாமரை மலர் போன்ற நிடத நாட்டின் ஆட்சிப் பொறுப்பை அவன் ஏற்றுக்கொண்ட செயல் அன்னப் பறவை விட்டு நீங்கிய தாமரை மலரிலே, ஒரு காகம் வீற்றிருப்பது போலக் கவிஞன் கண்களுக்குத் தெரிந்தது. காகம் அசிங்கமான பறவை; அழகில்லாதது; தண்ணீரில் நின்று பிரித்துப் பாலைப் பருகும் அன்னத்தைப் போன்றதன்று. அசுத்தமானவையையும் ஆசையோடு உண்ணும் தன்மையது. நிடத நாட்டு ஆட்சியைப் பொறுப்பேற்ற புட்கரன் புகழேந்தியார் கண்களுக்கு அசிங்கமான புன் காகத்தைப் போன்று தோன்றினான். அழகிய அன்னம் வீற்றிருந்த தாமரைப் பூவில் அசிங்கமான காகம் வீற்றிருந்தது போல, நளன் செல்வச் சிறப்போடு வீற்றிருந்த நிடத நாட்டிலே புட்கரன் குடிபுகுந்தான் என்று கவிஞன் செய்யுளைச் செய்தான்.

மென்கால் சிறையன்னம் என்ற தொடர் அன்னப் பறவையின் சிறப்பையும் அழகையும் புலப்படுத்தி நிற்கின்றது. இதனால் நளனின் செங்கோல் முறையையும், அறமுறை திறம்பா ஒழுக்கத்தையும் புகழேந்தியார் புலப்படுத்தினார். இன்னும் நள மன்னன் வேற்று நாட்டு வேந்தர்களும், பகை மன்னர்களும் குறை வேண்டினாரும், முறை வேண்டினாரும், இரவலரும், ஏத்துவோரும், பிறருமாக வணங்கி நிற்கும் கால்களையுடையான்; எங்கு செல்லினும் தேரினும், கரியினும், பரியினும் செல்வோன்; நடந்தேயறியாதோன்; அத்தகையோனுடைய கால்கள் - இன்று மண்ணிலே தோய, புழுதிகள் படிய நடந்தனனே என்னும் இரக்கக் குறிப்பு நயந்தோன்றத் தான் மட்டுமா? தன் இள மயிலனைய தேவியும் வழிக்கொண்டு தொடரச் சென்றானே என்னும் தன்மையும் தெரியத் தன்கால் பொடியாடத் தேவியோடும் போயினான் என்றார் என்று விளக்கவுரை தரப்பட்டுள்ளது.

கலியின் வலியாற் காட்டிலே தன்னந்தனியாக தமயந்தியை விட்டு நீங்கினான் நளன். கொடிய இருளிலே கணவரைக் காணாது கண்ணீர் விட்டுக் கதறி அழுதாள் தமயந்தி. கணவனைத் தேடினாள். எங்கும் கண்டிலள் பாம்பின் வாய்ப்பட்டுப் பதைபதைத்தாள். அப்போது அங்கே வந்த வேடன் ஒருவன் பாம்பின் வாயினின்றும் தமயந்தியை மீட்டான். மீட்டபின் அவளைத் தன்னுடன் வருமாறு அழைத்தான். தமயந்தி வேடனுக்கு அஞ்சி ஓடினாள்; அழுது அலறினாள்; கண்ணீர்

ஆறாக ஓடியது; கூந்தல் புதர்களிற் சுற்றி அறுந்தது; ஆடி ஓய்கின்ற மயிலைப் போன்று சுழன்று அலமந்தாள்.

இத் துன்பமான காட்சியைக் கவிஞன் கண்டான். வேடன் துரத்துவதும், தமயந்தி ஓடுவதும் அவனை கற்பனை உலகுக்கு இட்டுச் சென்றது. துரத்திச் சென்ற வேடன் தீய கண்களையுடைய புலி போலக் கவிஞன் கண்களுக்குத் தோன்றினான். உடல் தளர்ந்து அலமந்து ஓடிச் சென்ற தமயந்தி ஒரு சிறிய மானைப் போற் காணப்பட்டாள். இதனை, 'தீக்கண் புலி தொடரச் செல்லும் சிறு மான் போல்' என்று வருணித்தான் கவிஞன்.

கொடிய புலி சிறிய மானைக் கொல்வது எளிதானதே! ஆனால் தமயந்தி என்ற சிறிய மான் கற்புக் கடம் பூண்ட பொற்புடைத் தெய்வம் போன்றவள். புலியால் துரத்தப்பட்டு ஓடி அலமந்த அவள் வீறுகொண்டாள். ஓடிச் சென்றவள் திடீரென நின்றாள்; திரும்பினாள். ஓடி வந்த புலியை விறைத்து நோக்கினாள். அவள் கண்களில் நின்று திண்மை ஒளி வெளிவந்தது. அந்த ஒளி வேடனை வெதுப்பிற்று. வேடன் வாடினான்; தளர்ந்தான்; வீழ்ந்தான்; இறந்தான்.

**சீறா விழித்தாள் சிலை வேடன் அவ்வளவில்**
**நீறாய் விழுந்தான் நிலத்து**

புலி போல வேடன் தமயந்தியைத் துரத்தியதையும் சிறிய மான் போல் தமயந்தி ஓடியதையும் ஆற்றா நிலையிலே கற்பென்னும் திண்மையால் வேடனை எரித்ததையும் சொற்களால் ஓவியமாகத் தீட்டுகின்றார் புகழேந்தியார்.

**தீக்கண் புலிதொடரச் செல்லும் சிறுமான்போல்**
**ஆக்கை தளர அலமந்து - போக்கற்றுச்**
**சீறா விழித்தாள் சிலைவேடன் அவ்வளவில்**
**நீறாய் விழுந்தான் நிலத்து**

ஒரு நெறியில் நெறிப்பட்டு நின்றார். அவர் எண்ணிய எண்ணியாங்கே எய்தப் பெறுவர். கற்பென்னும் கலங்காநிலை பெற்ற பெண்டிர்க்குத் தாம் நினைத்தனவெல்லாம் முடியும் ஆற்றல் பெருகி நின்றது. வெய்யவன் ஒளி எங்கும் எல்லாம் பொருளினும் பரவி நிறைந்து கிடக்கின்றது. ஆனால் அவன் பேரொளி ஓரிடத்திலும் திண்மை பெறாமல் இருக்கின்றது. நெருப்புக் கண்ணாடியின் வழியே ஒளி நன்கு ஊடுறுவிப் பாய்ந்து அதன் கண் நிலைத்து நிற்பதால், அக்கண்ணாடிப் பக்கலில் உள்ள பொருள்களிலே தீக்கதுவிப் பிடித்தெரிகின்றது. அதுபோன்று தன் மனத்தை ஒருமுகப்படுத்தித் திட்பமாக்கிய நெஞ்சுரம் பெற்ற நல்லோர் தாம் எண்ணியதை முடிக்கும் தன்மை நிலையை எய்தப் பெறுவர். இந்த முறையாகத் தமயந்தி, தன் கணவன்பாற் பேரெல்லை கடந்த பற்றுக் கொண்டாள்.

**கொடியன் ஆயினும் ஆக**
**அவனே தோழிஎன் உயிர்கா வலனே**

எனக்கொள்ளும் கற்புக்கடம் பூண்ட பொற்புடைப் பெண்மை இயற்கை வாய்ந்தவள் தமயந்தி. அதனால் அவள் தன் உள்ளம் ஒருமுகமாக நிலைபெறலாயிற்று. அவள், தன் உள்ளத்தை ஒருமைப்படுத்தினாள். உள்ளத் திண்மை கொண்டு தனக்கு ஊறு செய்யத் தொடர்ந்து வரும் வேடனைக் கண்ணாற் பார்த்தாள். அக்கண்களினின்றும் வெளிப்பட்ட திண்மை என்னும் ஒளி வேடன் உடலை வெதுப்பிற்று. வாட்டிற்று. கீழே விழுந்தான்; இறந்தான்; இது உளநூல் இயல்பும் கட்பார்வையின் திட்பமும் உணர்ந்தோர் நன்கறிவர். கண்ணொளி ஆற்றலை மறைமலையடிகள் ஆக்கிய 'மனித வசியம்' என்னும் உரைநடை நூலில் 'கண்' என்னும் பகுதியில் விரிவுபடக் காண்க. தன் கற்புத் திண்மையால் நெருப்பூட்டி மதுரை மாநகர் எரித்த கண்ணகியார் வரலாற்றாலும் உணர்க. இத்துன்ப நிலையை இவ்வரிய பெரிய நிகழ்ச்சியை 'விழித்தாள் சிலை வேடன்... நீறாய் விழுந்தான்' எனும் சொற்றொடரினால் அமைத்தார் ஆசிரியர். என்று எடுத்துரைக்கப்பட்டுள்ள விளக்கவுரையும் ஆராய்ந்து நோக்கற்பாலது.

இதுவரை நளவெண்பாவில் மூன்று சொல்லோவியங்களைப் பார்த்தோம். நளனினதும் தமயந்தியினதும் கண்கள் சந்தித்த காட்சியைப் புகழேந்தியார் சொல்லோவியமாகப் புனைந்த காட்சி ஒன்று. நளன் நாட்டைவிட்டுக் காட்டுக்குச் சென்றது இன்னொன்று. தமயந்தி சினங்கொண்டு விழித்து வேடனை எரித்து சாம்பராக்கிய சொல்லோவியக் காட்சி மற்றொன்று.

***கலாநிதி ஆ. கந்தையா***
***(இலக்கிய வளம் எனும் நூலிலிருந்து)***

***பயிற்சி***

1. **தேங்குவளை தன்னிலே செந்தா மரைமலரப்**
   **பூஙகுவளை தாமரைக்கே பூத்ததே**
   என்ற கற்பனை பொருத்தமானதா? விளக்குக.

2. புட்கரனை காகத்தோடு ஒப்பிட்டிருப்பதன் மூலம் புலவர் எதனை வெளிப்படுத்த விழைகின்றார்? விபரிக்குக.
3. வேடனைக் கண்டு அஞ்சி தமயந்தி ஓடும் காட்சியைப் புகழேந்தியார் வர்ணிப்பதில் உள்ள சிறப்புக்களைக் கூறுங்கள்.
4. மேற்படி கட்டுரையில் திருவள்ளுவரது கருத்து மேற்கோள் காட்டப் பட்டிருக்கு மாற்றின் பொருத்தப்பாட்டினை தெளிவுபடுத்துக.
5. கட்டுரைக்கு கொடுக்கப்பட்டுள்ள தலைப்பு பொருத்தமானதா? ஏன்?

◆ அரும்பதங்கள்

| | |
|---|---|
| மிளிரும் | - ஒளி வீசுதல், வெளிப்படல் |
| நுதல் | - நெற்றி |
| சூளுறைத்தல் | - சபதம் செய்தல் |
| கலி | - கலிபுருடன், சனீஸ்வரன் |
| சாகரம் | - கடல் |
| அருங்கலம் | - அணிகலன் |
| நொய்மை | - மென்மை |
| அலமந்து | - அஞ்சி, கலங்கி |
| ஆக்கை | - உடம்பு |
| திண்மை | - உறுதி |
| சிலை | - வில் |

# அணிகள்

கவிஞன் தான் எடுத்துக்கொண்ட பொருளை அழகாகவும், பொருள் வலிமையோடும், சுவைபடவும் வெளிப்படுத்துவதற்காக கையாளும் பல்வேறு உத்திகளுள் அணிகள் சிறப்பிடம் பெறுகின்றன. அணி என்பது அழகு, அலங்காரம் எனவும் பொருள்படும். அணிகள் பலவகைப்படும் அவற்றுள் முக்கியமான ஒருசில அணிகளை அறிந்துகொள்வோம்.

**உவமையணி:**

ஒருவர் தாம் எடுத்துக்கொண்ட பொருளை விளக்குவதற்காக வேறொரு பொருளை ஒப்பிட்டுக் காட்டுவது உவமை அணியாகும். உவமானம், உவமேயம் பொதுத்தன்மை, உவமை உருபு என்பன இதன் பகுதிகளாகும்.

(உ ம்) **தயிர்க் கடலில் வெண்ணெய் போல் - வெண்ணிலாவே**
**தனி விசும்பிற் றவழ்ந்திடுவாய் வெண்ணிலாவே**

| | |
|---|---|
| உவமானம் | - தயிர்க்கடலில் வெண்ணெய் |
| உவமேயம் | - வெண்ணிலா |
| பொதுத்தன்மை | - உவமானத்திற்கும் உவமேயத்திற்கும் இடையிலான ஒற்றுமை (வெள்ளை நிறம்) |
| உவமை உருபு | - போல |

**உருவக அணி:**

உவமானத்தையும் உவமேயத்தையும் வேறுப்படுத்திக் கூறாமல் உவமைக் குறிப்பை உள்வாங்கி ஒரு பொருளை மற்றொன்றாக உருவகித்துக்கூறுவது உருவக அணியாகும். 'அதுவே இது' என நிச்சயித்துக் கூறும் தன்மையை இவ்வணி கொண்டுள்ளது.

உதாரணம் '**பிள்ளைக் கனியமுதே கண்ணம்மா**
**பேசும் பொற் சித்திரமே............**' இங்கு கண்ணம்மா - பிள்ளைக்கனியமுதாக பேசும் பொற்சித்திரமாக உருவகிக்கப்பட்டுள்ளாள்.

**தன்மை நாவிற்சி அணி:**

உள்ளதை உள்ளவாறு சுவைபட அழகாக எடுத்துரைப்பது தன்மை நவிற்சி அணியாகும்.

(உதாரணம்) **கேடில் விழுச் செல்வம் கல்வி யொருவற்கு**
**மாடல்ல மற்று பிற**
- திருக்குறள்

கல்விச் செல்வம் என்றும் அழியாச் செல்வம் என்ற உண்மை உள்ளது உள்ளபடி கூறப்பட்டிருப்பதே தன்மை நவிற்சி அணியாகும்.

2. (கடல் நீரும் நீலவானும் கைகோக்கும் அதற்கிதற்கும் இடையிலே கிடக்கும் வெள்ளம் எழில் வீணை)

3. **சித்திரமும் கைப் பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்**
**வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் - நித்தம்**
**நடையும் நடைப் பழக்கம் நட்பும் தமையும்**
**கொடையும் பிறவிக் குணம்**

**உயர்வு நவிற்சி அணி:**

ஒரு பொருளின் தன்மையை மிகைப்படுத்தி உயர்த்திக் கூறுவதே உயர்வு நவிற்சி அணியாகும்.

உதாரணம் 1. **முள்ளாலே மகுடத்தை தலையில் வைத்து**
**ஞானமகன் நின்றவுடன் ஞானமெலாம்**
**ஓர் பொழுது நடுங்கிற்றம்மா.**
2. **வீதி தோறும் வானளாவும் கோபுரங்கள்**

இங்கு கோபுரங்களின் உயரம் மிகைப்படுத்திக் கூறப்பட்டுள்ளது.

## தற்குறிப்பேற்ற அணி:

புலவர் தாம் சொல்ல வரும் விடயத்தை இயற்கை நிகழ்வொன்றில் ஏற்றுக் கூறுவது தற்குறிப்பேற்ற அணியாகும்.

உதாரணம்
காதலியை காரிருளில் கானகத்தே கைவிட்ட
பாதகனைப் பார்க்கப் படாதென்றோ - நாதம்
அளிக்கின்ற ஆழிவாய் ஆங்கலவ னோ
ஒளிக்கின்ற தென்னோ உரை

***பயிற்சி***

*1. பின்வரும் பாடலில் இடம்பெற்றுள்ள உவமை அணியை எடுத்துக் காட்டுக.*

காட்டெருமை காலடியிற்
பட்ட தளிர் போல
நீட்டு ரயிலில்
எறும்பு நெரிந்தது போல
பூட்டா நம் வீட்டின் பொருள் போல
நீ மறைந்தாய்

*2. பின்வரும் பாடலில் இடம்பெற்றுள்ள உருவக அணியை எடுத்துக் காட்டுக.*

சீதமணி நெடு வானக் குளத்திடை
வெண்ணிலாவே
தேசு மிகுந்த வெண்டாமரை போன்றனை
வெண்ணிலாவே

*3. பின்வரும் பாடலில் இடம்பெற்றுள்ள தன்மை நவிற்சி அணி எது?*

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர் தூக்கின் - மன்னவனுக்கு
தன் தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோருக்கு
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு

*4. இச் செய்யுளில் இடம்பெற்றுள்ள உயர்வு நவிற்சி அணியை எழுதுக.*

வெங்கதிரோன் தானும் விதர் ப்பன் திருமடந்தை
மங்கல நாள் காண வருவான் போல்

*5. பின்வரும் செய்யுளில் இடம்பெற்றுள்ள தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக் காட்டுக.*

தையல் துயர் க்குத் தங்காது தஞ்சிறகாம்
கையால் வயிறலைத்துக் காடருள்வாய்- வெய்யோனை
வாவு பரிந் தேரேரி வாவென் றழைப்பனபோல்
கூவினவே கோழிக் குலம்

6. *பின்வரும் வாக்கியங்களில் காணப்படும் அணிகளை இனங்கண்டு குறிப்பிடுக.*

★ *தேரிற்றுகளைத் திருந்திழையார் வேரிப்புனல்
நனைப்பவே யடைந்தான்*

★ *நச்சு மனப்பான்மை புவிமேல் விழும் பேரிடியாய்*

★ *இதயப் பேழையிலே இலங்கும் நினைப்பு*

★ *அற்றைநாள் போரினைக் காணப் புகுந்தான்
போன்று சூரியன் உதித்தான்*

## மேலதிக செயற்பாடு

*பின்வரும் பகுதிகளில் அமைந்துள்ள அணிகளைக் குறிப்பிட்டு, சுருக்கமாக விளக்குக.*

(அ) எஃகிய பஞ்சினைப் போல - தமிழ்
எல்லாமைனன் இருதயம் போக
வெஃகிய வெண் முகிற் கூட்டம் - இந்து
வெண்டிரை மேய வெழுந்திடுமன்றே

(ஆ) தொட்டனைத் தூறும் மணற் கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்தூறும் அறிவு

(இ) வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்தனையது உயர்வு

(ஈ) தையல் துயர்க்குத் தரியாது தன்சிறகாம்
கையால் வயிறலைத்துக் காரிருள்வாய் - வெய்யோனை
வாவு பரித்தேரேறி வாவென் றழைப்பனபோல்
கூவினவே கோழிக்குலம்

(உ) சுட்டும் விழிச்சுடர்தான் - கண்ணம்மா
சூரிய சந்திரரோ

(ஊ) மனமெனும் தோணிபற்றி
மனமெனும் கோலை ஊன்றி

(எ) குமுதன் இட்ட குலவரை கூத்தரில்
திமிதம் இட்டு திரியும் திரைகடல்
துமிதம் ஊர்புக வானவர் துள்ளினார்
அமுதம் இன்னும் எழும்எனும் ஆசையால்

# துண்டுப் பிரசுரம்

நடைமுறைத் தேவைகளுக்காக எழுந்த ஆக்கங்களில் துண்டுப் பிரசுரங்கள் முக்கியம் பெறுகின்றன. இவற்றின் மூலம் தகவல்களை இலகுவாகப் பரப்புவதற்கு கருத்துப் பிரசுரங்கள் வெளியிடப்படுகின்றன. அவை பொருத்த தகவல்களைத் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவும், மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்குவதற்காகவும், சில வேண்டுகோள்களை விடுப்பதற்காகவும் பிரசுரிக்கப்படுகின்றன.

## துண்டுப் பிரசுரங்களின் வகைகள்

1. கொள்கை பரப்பும் துண்டுப் பிரசுரம்
2. அறிவுறுத்தும் துண்டுப் பிரசுரம்
3. வேண்டுகோள் விடுக்கும் துண்டுப் பிரசுரம்
4. விளம்பரத்திற்கான பொருட்கள் , சேவைகள் பற்றிய துண்டுப் பிரசுரம்

## துண்டுப் பிரசுரங்கள் வழங்குவதற்கான / வெளியிடுவதற்கான நோக்கங்களும் குறிக்கோள்களும்

1. கொள்கை பரப்பும் துண்டுப் பிரசுரம்
   (சமயப் பிரச்சாரம், அரசியல் பிரச்சாரம் சார்ந்த துண்டுப் பிரசுரங்கள்)

2. மக்களுக்கு அறிவுறுத்தும், மக்களுக்கு விழிப்புணர்வு வழங்கும் துண்டுப் பிரசுரம்
   (சூழல் சுத்தம், டெங்கு ஒழிப்பு சார்ந்த துண்டுப் பிரசுரங்கள்)

3. வேண்டுகோள் விடுக்கும் துண்டுப் பிரசுரம்
   (சிரமதானத்திற்கு அழைப்பு விடுத்தல், ஏழை நோயாளிகளுக்கு உதவிப்பணம் கோரல் போன்ற துண்டுப் பிரசுரங்கள்)

4. விளம்பரத்திற்கான, பொருட்கள் , சேவைகள் பற்றிய துண்டுப் பிரசுரம்
   (இலவச மருத்துவ சேவை)

**துண்டுப் பிரசுரங்களை எழுதுவதற்காக பின்வரும் அணுகுமுறை கடைப்பிடிக்கப்படுகின்றது.**

- ★ சுருக்கமாகவும், தெளிவாகவும், கருத்துச் செறிவுடனும் எழுதப்படல் வேண்டும்.
- ★ கவர்ச்சியான மொழிநடையில் எழுதப்படல்.
- ★ மக்களின் கவனத்தை ஈர்க்கக் கூடியதாக அமைதல்.

**துண்டுப் பிரசுரத்தில் உள்ளடக்கப்படவேண்டிய விடயங்கள்:**

- ★ கவர்ச்சிகரமான தலைப்பு
- ★ பொதுவான விளிப்பு
- ★ விடய விபரிப்பு
- ★ வெளியிடுவோர் பற்றிய தகவல் (பெயரும், முகவரியும், திகதியும்)

***பயிற்சி***

*கீழ்வரும் தலைப்புகளில் துண்டுப் பிரசுரங்களை தயாரிக்கச் செய்தல். (100 சொற்கள்)*

1. *சுற்றாடலை தூய்மையாக வைத்திருப்போம் (100 சொற்களுக்குள்)*
2. *பொதுச் சொத்துக்களை பாதுகாப்பதன் அவசியம்*
3. *சிறுவர் உரிமைகள் பேணப்படுவதன் அவசியம்*
4. *தொற்று நோய்கள் பற்றிய விழிப்புணர்வு*
5. *இலத்திரனியல் கருவிகளைப் பயன்படுத்துவது தொடர்பான அவதானம் தேவை*

## மாதிரி துண்டுப் பிரசுரம்

### மாபெரும் கண்காட்சி

*பொதுமக்களே!*

*இதோ உங்களுக்கோர் அரிய சந்தர்ப்பம். கண்களுக்கு விருந்தாகவும் உள்ளத்திற்கு இதமாகவும் கண்டு களிப்படையுங்கள். 'தேசத்திற்கு மகுடம்' கண்காட்சியை கண்டு பரவசப்படுவோம்.*

- ★ *ஒரே நாளில் பல விடயங்களை கண்டு களிப்பதற்கு..*
- ★ *பணச் செலவின்றி முற்றிலும் இலவசமாக..*

*வாழ்க்கைக்குத் தேவையான புதுமையான அனுபவங்களைப் பெறுவதற்கு சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவருக்கும்*

*அரிய வாய்ப்பு தவறவிடாதீர்கள்!*

***2014.01.10*** **பொருளாதார அபிவிருத்தி அமைச்சு**

# ஒரு சொல் - பல பொருள்

| | | |
|---|---|---|
| 1. அணி | - | வரிசை, அழகு, ஆபரணம், குழு, அணிதல் |
| 2. அரவம் | - | ஒலி, பாம்பு |
| 3. ஆடி | - | ஒரு மாதம், கண்ணாடி |
| 4. ஆதி | - | தொடக்கம், முதல் |
| 5. உரம் | - | நெஞ்சு, வலிமை, பசளை |
| 6. ஆறு | - | ஓர் எண்(6), நதி, வழி |
| 7. மெய் | - | யாக்கை, உடம்பு, உண்மை |
| 8. அரை | - | பாதி, இடுப்பு, அரைத்தல். |
| 9. கலம் | - | ஆபரணம், பாத்திரம், கப்பல். |
| 10. இறை | - | தெய்வம், இறைத்தல், வரி |
| 11. ஆழி | - | கடல், மோதிரம், சிங்கம் |
| 12. ஐயம் | - | பிச்சை, சந்தேகம், இரத்தல் |
| 13. நகை | - | ஆபரணம், சிரிப்பு, இகழ்ச்சி |
| 14. அன்னம் | - | சாதம், ஒரு பறவை, சோறு |
| 15. கவி | - | குரங்கு, பாட்டு, புலவன் |
| 16. ஒளி | - | வெளிச்சம், மறைத்து வை. |
| 17. கரி | - | அடுப்புக் கரி, யானை, சாட்சி |
| 18. ஓடு | - | ஓடுதல், ஆமை, நண்டு, கூரை ஓடு, புளியம் பழத்தின் ஓடு |
| 19. திங்கள் | - | மாதம், சந்திரன், ஒரு நாள் |
| 20. பந்தம் | - | கட்டு, உறவு, மலம், கயிறு, பாசம் |
| 21. மஞ்சு | - | மேகம், ஆபரணம், வலிமை, அழகு |
| 22. வடு | - | பிஞ்சு, தழும்பு, காயம் |
| 23. படி | - | படித்தல், ஏறும்படி, வாசற்படி, வேதனம், கூலி, சம்பளம். |
| 24. விலங்கு | - | மிருகம், கைவிலங்கு |
| 25. சரம் | - | மாலை, அம்பு, பாணம் |

# ஒரு பொருள் - பல சொல்

1. சூரியன் - ஞாயிறு, பகலவன், கதிரவன், ஆதவன், பரிதி, அருக்கன், வெய்யோன்
2. வானம் - ஆகாயம், வான், விசும்பு, விண்ணகம், விண்
3. நெருப்பு - தீ, அக்கினி, அழல், தழல், கனல்
4. பாட்டு - கவி, கவிதை, செய்யுள், பா, பாடல், கீதம்
5. புத்தகம் - ஏடு, நூல், இழை, பனுவல்
6. பூமி - உலகம், புவி, பார் , வையகம், அகிலம், தரணி, குவலயம்
7. நித்திரை - துயில், உறக்கம், துஞ்சல், தூக்கம்
8. உடல் - தேகம், உடம்பு, சரீரம், மேனி, யாக்கை
9. ஒலி - தொனி, சத்தம், அரவம், ஓசை, ஆரவாரம்
10. சினம் - கோபம், சீற்றம், காய்தல், முனிதல்
11. மனைவி - மனையாள், இல்லாள், தலைவி, கிழத்தி
12. உண்மை - மெய், சத்தியம், வாய்மை
13. தலை - சிரசு, உச்சி
14. பாம்பு - சர்ப்பம், அரவம், பணி
15. குழந்தை - மகவு, சேய், பிள்ளை, குழவி, சிசு, மழலை
16. சிரிப்பு - புன்னகை, நகைப்பு, முறுவல்
17. சந்திரன் - திங்கள், மதி, பிறை, நிலவு, நிலா, அம்புலி
18. அரசன் - மன்னன், வேந்தன், கோன், கோ
19. வனம் - காடு, ஆரணியம், கானகம், அடவி
20. ஆசை - ஆவல், விருப்பம், அவா
21. வயல் - பழனம், கழனி, கமம்
22. சண்டை - சமர், அமர், போர், யுத்தம்
23. சோறு - அன்னம், சாதம், அடிசில்
24. இரத்தம் - குருதி, உதிரம், சோரி, கறை
25. குதிரை - அசுவம், துரகம், புரவி, மா, பரி
26. நீர் - தண்ணீர் , புனல், சலம், அப்பு
27. தாமரை - கமலம், பங்கயம், அம்புயம்
28. தண்டனை - அபராதம், குற்றம், தண்டம்
29. அழகு - எழில், வனப்பு, கவின், வடிவு, அணி
30. வீடு - இல்லம், மனை, அகம், உறையுள்
31. சிங்கம் - சீயம், கேசரி, மடங்கல், அரி